**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093646

1. District : நாமக்கல் மாவட்டம் PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் Year: ஆண்டு 06/AC/2020 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 27.11.2020

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 and 7A
(ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 26.11.2020 மாலை Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.30 மணிக்கு மேல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.11.2020 Time : நேரம் காலை 11.30 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - IV 27.11.2020 Time : நேரம் காலை 11.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.ப. பெரியசாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. பழனி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.04.1963 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர். (g) Address : முகவரி சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம். சேலம்-1.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி. R. மாலதி, உதவியாளர், சார் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு) சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் மற்றும் 9 நபர்கள் (விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

FORM-91 நாள் 27.11.2020-ன் மூலம் அனுப்பப்படுகிறது)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. நிர்மலா பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 27/11/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 27.11.2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.11.2020 அன்று 14.00 மணிக்கு

Name: பெயர் அ. கி. ஜெயக்குமார்,
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர் [illegible]
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/AC/2020, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,**

எதிரிகளின் பட்டியல்

1. திருமதி.R.மாலதி, உதவியாளர், சார்பதிவாளர் (கூடுதல் பொறுப்பு), சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2. திரு.P.சுப்ரமணி (வயது-40/2020), த/பெ.பழனிசாமி, இளநிலை உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம், அயல்பணி சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு (இருப்பிடம்: கதவு எண்.2/52, அனிமூர், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்).

3. திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர், கதவு எண்.9/1-A ASM லாட்ஜ், வடக்கு மாட வீதி, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

4. திரு.M.சுரேஷ் (வயது-54/2020), த/பெ.முத்துசாமி, கதவு எண்.9/121, நெட்டவேலாம்பாளையம், ஆனங்கூர், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

5. திரு.S.வெங்கடேசன் (வயது-54/2020), த/பெ.சுப்ரமணியன், கதவு எண்.9/3/1, SND ரோடு, கிராஸ்-3, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

6. திரு.S.சுரேந்திரகுமார் (வயது-56), த/பெ.சுப்ரமணியன், எண்.215, கோம்பை நகர், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. திரு.N.விஜயகுமார் (வயது-31/2020), த/பெ.நடராஜன், கதவு எண்.1/124, சுள்ளிபாளையம், பரமத்திவேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

8. திரு.E.K.சரவணன் (வயது-48/2020), த/பெ.கமலசேகரன், கதவு எண்.2/136, கச்சேரி தெரு, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

9. திரு.T.G.அர்த்தநாரி (வயது-64/2020), த/பெ.கோபாலகிருஷ்ணன், கதவு எண்.76, மாரியம்மன் கோவில்தெரு, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

10. திரு.P.கண்ணன் (வயது-40/2020), த/பெ. M.பழனியப்பன், கதவு எண்.2/8, மேற்கு காடு, கோழிக்கால்நத்தம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/AC/2020, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

- - -

**சமர்ப்பிக்கப்படுகிறது:**

இன்று 27.11.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.அ.ப.பெரியசாமி அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி சமர்ப்பித்த புகார் அறிக்கையின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர்: திரு.அ.ப.பெரியசாமி, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், சேலம்-1. பெறுநர்: காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல். Roc.No.138/2020/ICI-1, நாள்: 27.11.2020. அய்யா, பொருள்: ஆய்வுக்குழு - திடீர் தணிக்கை - 26.11.2020-ஆம் தேதி மாலை 17.30 மணி முதல் 27.11.2020-ஆம் தேதி அதிகாலை 02.00 மணி வரை திருச்செங்கோடு சார் பதிவாளர் அலுவலகத்திலும், 27.11.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை 02.15 மணிமுதல் காலை 07.30 மணி வரை திடீர் தணிக்கை மேற்கொண்டது -நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வடக்கு மாட வீதி, கதவு எண்.9/1-A ASM லாட்ஜ் கட்டிடத்தின் கீழ் தரைதளத்தில் இயங்கிவரும் திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர் அவர்களின் அலுவலக அறையில் வைத்து கைப்பற்றுதல் மகஜரில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது - குற்றவியல் தொடர்புள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் - தொடர்பாக. பார்வை: 1) சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள், நாள்: 26.11.2020. 2) சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் கைப்பற்றுதல் மகஜர், நாள்: 27.11.2020. நான் சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் திருச்செங்கோடு

சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரபதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் 26.11.2020-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 26.11.2020-ம் தேதி வியாழக்கிழமை மாலை 17.30 மணிக்கு திருச்செங்கோடு to சங்ககிரி செல்லும் தென்வடல் சாலையில் மேற்குபுறம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு எதிர்புறம் கிழக்கு பார்த்தவாறு இயங்கி வரும் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலர் சேலம், நாமக்கல், தர்மபுரி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் ஆகிய நான் நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு ஆய்வாளர்-I மற்றும் குழுவினருடன் சென்று திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தின் வெளிப்பகுதி, தரைதளத்தில் உள்ள வராண்டா, சார்பதிவாளர் அறை, உதவியாளர் அறை, கணினி அறை மற்றும் இதர பணியாளர்களின் அறைகளில் உள்ள அலுவலர்கள் யாரும் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியும், அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள், ஆவண எழுத்தர்கள், தனி நபர்கள்/புரோக்கர்கள், பொதுமக்கள் உட்பட அனைவரும் திடீர் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். திடீர் தணிக்கை 26.11.2020-ஆம் தேதி மாலை 17.30 மணி முதல் 27.11.2020-ஆம் தேதி அதிகாலை 02.00 மணி வரை நடைபெற்றது. மேலும் 27.11.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை 02.15 மணிமுதல் காலை 07.30 மணி வரை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வடக்கு மாட வீதி, கதவு எண்.9/1-A ASM லாட்ஜ் கட்டிடத்தின் கீழ் தரைதளத்தில் இயங்கிவரும் திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர் அவர்களின் அலுவலக அறையில் வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கணக்கில் வராத சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த கையூட்டு பணம் கைப்பற்றப்பட்டது.

மேலும் திடீர் தணிக்கையின் ஒருபகுதியாக சார் பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.P.சுப்ரமணி என்பவரின் இருசக்கர வாகனத்திலிருந்து கீழ்கண்ட கணக்கில் வராத கையூட்டு பணம் கைப்பற்றப்பட்டது.

| வ. எண். | பணம் கிடைக்கப்பெற்ற இடம் | பணம் ரூ | பொறுப்பு அலுவலர்கள் |
|---|---|---|---|
| 1. | திரு.P.சுப்ரமணி, இளநிலை உதவியாளர், அயல்பணி சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு என்பவரின் TN 34 Y 1464 பதிவெண் கொண்ட Hero Passion Pro இரு சக்கர மோட்டார் வாகனத்தில் முன்புற கவரில் இருந்த மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாமக்கல் என்று சீல் வைக்கப்பட்ட ஒரு வெள்ளை கவரில் மடிப்புடன் இருந்தது. | ரூ.1000/- | 1) திருமதி.R.மாலதி, உதவியாளர்/சார் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு), திருச்செங்கோடு.<br><br>2) திரு.P.சுப்ரமணி, இளநிலை உதவியாளர், அயல்பணி சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு. |

மேலும் திடீர் தணிக்கையின்போது சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த ஆவண எழுத்தர்/தனியர்கள்/புரோக்கர்கள் பொதுமக்களுக்கு இடைத்தரகர்களாக செயல்பட்டு வந்துள்ளனர். அவர்களை சோதனை செய்து, விசாரித்து அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தும், அவர்களிடமிருந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அவர்கள் வைத்திருந்த பின்வரும் கணக்கில் வராத கையூட்டு பணம் கைப்பற்றப்பட்டது.

| வ. எண். | தனிநபர்/ஆவண எழுத்தர்/புரோக்கர் ஆகியோரின் பெயர் விபரம் | கைப்பற்றப்பட்ட பணம் ரூ. | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|---|
| 1. | திரு.M.சுரேஷ் | ரூ.20,000/- | திருமதி.R.மாலதி, உதவியாளர்/சார் பதிவாளர் (கூடுதல் பொறுப்பு), திருச்செங்கோடு. |
| 2. | திரு.S.வெங்கடேசன் | ரூ.2,500/- | |
| 3. | திரு.S.சுரேந்திரகுமார் | ரூ.2,000/- | |
| 4. | திரு.N.விஜயகுமார் | ரூ.31,000/- | |
| 5. | திரு.E.K.சரவணன் | ரூ.25,000/- | |
| 6. | திரு.T.G.அர்த்தநாரி | ரூ.4,000/- | |
| 7. | திரு.P.கண்ணன் | ரூ.24,000/- | |

மேலும் திடீர் தணிக்கையின்போது தனியர் திரு.S.பாலசுப்ரமணி (வயது-38/2020), த/பெ.செங்கோடன், கதவு எண்.7/38, குட்டிக்காபாளையம், உஞ்சனை அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவரை விசாரித்த போது, அவர்

தான் தனது சித்தப்பா பத்திர எழுத்தர் சின்னுசாமி அலுவலகத்தில் வேலை பார்ப்பதாகவும், 26.11.2020-ஆம் தேதி அவர்களது அலுவலகத்தில் இருந்து மொத்தம் 7 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்றும், அந்த ஆவணங்களை பதிவு செய்ய அவ்வப்போது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து சென்றதாகவும், பத்திர எழுத்தர் அலுவலகத்தில் பத்திர பதிவிற்கு உரிய பணத்தை அவரது சித்தப்பா சின்னுசாமி பெற்று வைத்துள்ளதாக சொல்லியதை அடுத்தும், மேலும் கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் அடிப்படையிலும், திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு காவலர்களைக் கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை முடித்தவுடன் திருச்செங்கோடு, வடக்கு மாட வீதி, கதவு எண்.9/1-A ASM லாட்ஜ் கட்டிடத்தின் கீழ் தரை தளத்தில் இயங்கிவரும் திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு குழுவினருடன் வரப்பட்டது. அந்த அலுவலகத்தில் அமர்ந்திருந்த திரு.M.சின்னுசாமி, பத்திர எழுத்தர் அவர்களிடம் சார்பதிவாளருக்கு கொடுக்கவிருக்கும் பணம் குறித்து கேட்க, அவர் அவரது அறையில் வைக்கப்பட்டிருந்த பீரோவில் இருந்து பணத்துடன் கூடிய பைகள் மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்கள் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதில்

1) ரோஸ் கலர் பிளாஸ்டிக் டப்பாவில் மடிப்புடன் தொகை ரூ.19,500/- (Rs.500 x 37, 200 x 4, 100 x 2) இருந்தது.

2) பிரவுன் கலர் பாலித்தீன் கவரில் 1) ரவி கிரையம் என்று எழுதப்பட்ட துண்டு சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.500/-, 2) வசந்தா கருவேப்பம்பட்டி என்று எழுதப்பட்ட துண்டு சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.150/- (Rs.100 x 1, 50 x 1), 3) Marriage நகல் மதியரசு Rs.130/- என்று எழுதப்பட்ட துண்டுச் சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.130/- (Rs.100 x 1, 20 x 1, 10 x 1), 3) சித்தாளந்தூர் வரவு 10,000/- மகேஸ்வரி என்று எழுதப்பட்டுள்ள துண்டுச் சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.200/- (Rs.100 x 2), 4) காளியம்மாள்-500, பழனியம்மாள்-500, அமிர்தம்-710 - 1710 என்று சிவப்பு மையினால் எழுதப்பட்ட துண்டுச் சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.1,360/- (Rs.500 x 1, 200 x 4, 50 x 1, 10 x 1), 5) மேலும் மடிப்புடன் ரூ.450/- (Rs.100 x 4, 50 x 1) ஆக மொத்தம் தொகை ரூ.2,790/- இருந்தது. 5) தமிழ்நாடு பதிவுச்சட்டம் என்ற புத்தகத்தின் பக்க எண்கள்.48-49ன் நடுவில் மடிப்புடன்

ரூ.800/- (Rs.500 x 1, 100 x 3) இருந்தது. மேலும் அதில் பக்கம் எண்.98-99ன் நடுவில் ரூ.1,300/- (Rs.200 x 5, 100 x 3) இருந்தது. மேலும் அதில் பக்கம் எண்.134-135ன் நடுவில் ரூ.100/- (Rs.100 x 1), ஆக மொத்தம் தொகை ரூ.2,200/- இருந்தது.

3) மேலும் சிவப்பு கலர் பிளாஸ்டிக் டப்பாவில் 1) அன்னம்மாள் என்றும், தொகை விபரங்கள் கருப்பு கலர் மையினால் எழுதப்பட்டுள்ள துண்டுச்சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.210/- (Rs.100 x 2, 10 x 1) இருந்தது. 2) மேலும் அதில் ஒரு கத்தையாக ரூ.1230/- (Rs.50 x 16, 20 x 5, 10 x 33) இருந்தது. 3) மேலும் அதில் மற்றொரு கத்தையாக ரூ.3,500/- (Rs.200 x 1, 100 x 33) இருந்தது. 4) மேலும் அதில் சாமிதுரை என்று நீலநிற மையினால் எழுதப்பட்டுள்ள துண்டுச்சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.1,150/- (Rs.500 x 2, 100 x 1, 50 x 1) இருந்தது.

4) அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயில் நெய்வேத்திய பிரசாதங்கள் என்ற மஞ்சள் மற்றும் பச்சை நிற பையில் மடிப்புடன் ரூ.7000/- (Rs.200 x 35) இருந்தது மேலும் அதே யையில் மடிப்புடன் ரூ.30,000/- (Rs.500 X 60) மேலும் அதே பையில் ரூ.10,000/- (Rs.500 X 20) மடிப்புடன் இருந்தது. மேலும் அதே யையில் மடிப்புடன் ரூ.210/- (Rs.100 X 2, 10 X 1) இருந்தது. மேலும் அதே யையில் முருகேசன் E.C என்று பென்சிலில் எழுதப்பட்ட துண்டு சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.1,500/- (Rs.500 X 3) மடிப்புடன் இருந்தது. மேலும் ரூ.5,000/- (Rs.50 X 100) இருந்தது. மேலும் அதே பையில் வசந்தி என்று சிகப்பு மையினால் எழுதப்பட்ட துண்டு சீட்டுடன் இணைக்கப்பட்ட ரூ.8,100/- (Rs.500 x 14, 200 x 1, 100 X 9) ஒரு கத்தையாக இருந்தது. மேலும் அதே பையில் ஒரு கத்தையாக ரூ.18,700/- (Rs.2000 X 5, 500 X 17, 200 X 1) மடிப்புடன் இருந்தது. மேலும் அதே பையில் 25.11.2020 குமார் வரவு ரூ.1,50,000/- என்று எழுதப்பட்ட ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டுடன் ரூ.30,000/- (Rs.500 X 60) என இருந்தது. மேலும் ஒரு கத்தையாக ரூ.4,350/- (Rs.100 X 9, 50 X 69) மடிப்புடன் இருந்தது. மேலும் அதே பையில் அசோ/ 42,000/- என்று ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் கருப்பு மையினால் எழுதப்பட்டு அதனுடன் ரூ.42,000/- (Rs.500 X 84) பணம் இருந்தது.

5) மேலும் SPK GEMS SCHOOLS என எழுதப்பட்ட பச்சை நிற பையை சோதனை செய்த போது அந்த பையினுள் ரூ.7,000/- (Rs.2000 X 3, 500 X 2) மடிப்புடன் இருந்தது. மேலும் அதே பையில் அசோகன் வரவு 70,000/- பத் 68,000 அதற்கு கீழ் 2000 என்று வெள்ளை நிற துண்டு சீட்டில் கருப்பு நிற மையினால் எழுதப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்ட ரூ.2,000/- (Rs.500 X 4) இருந்தது.

6) மேலும் அதே பையில் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் 25.11.2020 தாமரைக்கண்ணன் EC-1, 1100, பெரியசாமி EC-2, 800 என கருப்பு மையினால் எழுதப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்ட ரூ.1,800/- (Rs.500 X 3, 200 X 1, 100 X 1) மடிப்புடன் பணம் இருந்தது.

7) மேலும் அதே பையில் ஒரு வெள்ளை நிற துண்டுச் சீட்டில் மல்லிகா விடுதலை பத் 4000 என்று கருப்பு மையினால் எழுதப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்ட ரூ.4,000/- (Rs.500 X 8) மடிப்புடன் பணம் இருந்தது.

8) மேலும் அதே பையில் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் பழனிஆண்டவர் 30,000/- பத் 23000 என ரோஸ் கலர் மையினால் எழுதப்பட்டு அதன் பின் புறம் வேலாகவுண்டம்பட்டி கிரையம் வரவு 6000/- என பென்சில் மற்றும் சிகப்பு மையினால் எழுதப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்ட ரூ.1,000/- (Rs.500 X 2) படிப்புடன் பணம் இருந்தது.

9) மேலும் அதே பையில் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் சத்தியா 800, விமலா 800, பிரபாகரன் 500, என கருப்பு மையினால் எழுதப்பட்டு ரூ.2,100/- (Rs.500 X 4, 20 X 5) மடிப்புடன் கூடிய பணம் இருந்தது.

10) மேலும் அதே பையில் ஒரு கத்தையாக பணம் இருந்தது, அதை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் ரூ.9,700/- (Rs.2,000 X 1, 500 X 10, 200 X 2, 100 X 23)இருந்தது.

11) மேலும் PMG ஜீவல்லரி, 125-3, வடக்கு ரத வீதி, திருச்செங்கோடு என எழுதப்பட்ட மெருன், சந்தன கலர் கொண்ட பேக் இருந்தது. அதை அரசு சாட்சிகள் முன்னிலையில் எடுத்து பார்க்க அதில் ரூ.1,890/- (Rs.100 X 14, 50 X 8, 20 X 3, 10 X 3) ஒரு கத்தையாக மடிப்புடன் இருந்தது. மேலும் அதே பையில் ரூ.4,800/- (Rs.200 X 24) ஒரு கத்தையாக மடிப்புடன் இருந்தது. மேலும் அதே பையில் ரூ.6,600/- (Rs.200 X 3, 100 X 60) ஒரு கத்தையாக இருந்தது.

12) மேலும் வெள்ளை நிற காடா துணி கொண்ட பையினுள் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் தாண்டாம்பாளையம் கந்தசாமி V-58000 என்றும், மேலும் 1,30,000 என கருப்பு மையினால் எழுதப்பட்டு அதனுடன் ஆறு கத்தைகளாக பணம் இருந்தது, அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் ஒரு கத்தையில் ரூ.45,200/- (Rs.2000 x 2, 500 X 66, 200 x 25, 100 X 32) இருந்தது. மற்ற 5 கத்தைகளில் ரூ.2,44,500/- (Rs.500 X 489) இருந்தது.

13) மேலும் அதே பிரோவில் அருள்மிகு ஸ்ரீபெரிய மாரியம்மன் என்று எழுதிய மஞ்சள் கலர் கொண்ட துணிப்பை இருந்தது. அதை எடுத்து பார்க்கையில் அதில் இரண்டு கத்தைகளாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்கையில் ஒரு கத்தையில் ரூ.38,000/- (Rs.2,000 X 10, 500 X 36) இருந்தது. மற்றொரு கத்தையில் ரூ.50,000/- (Rs.500 X 100) இருந்தது.

மேற்படி பணம், பணம் வைக்கப்பட்டிருந்த பைகள், பிளாஸ்டிக் டப்பாக்கள் மற்றும் துண்டு சீட்டுகள் ஆகியவை விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. எனவே, திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்ட போது சார்பதிவாளர் அலுவலகத்தில் விதிமுறைகளுக்கு மாறாக ஆவண எழுத்தர்/தனிநபர்கள்/புரோக்கர்கள் ஆகியோர்களை அலுவலகத்திற்குள் பணி செய்ய அனுமதித்த சார் பதிவாளர் திருமதி.R.மாலதி, கணக்கில் வராத கையூட்டு பணம் வைத்திருந்த சார் பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.P.சுப்ரமணி, சார் பதிவாளர் அலுவலகத்தில் கணக்கில் வராத கையூட்டு பணம் வைத்திருந்த ஆவண எழுத்தர்/தனிநபர்கள்/புரோக்கர்கள் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், திருச்செங்கோடு சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு கொடுக்க கணக்கில் வராத கையூட்டு பணம் மொத்தம் ரூ.6,06,030/- வைத்திருந்த மேற்படி திரு.M,சின்னுசாமி, பத்திர எழுத்தர் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கவும், சார் பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.P.சுப்ரமணி, மேற்படி தனியர்கள்/ஆவண எழுத்தர்/புரோக்கர்கள் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத கையூட்டு பணம் ஆக மொத்தம் ரூ.1,09,500/- அகும். மேலும் திடீர் தணிக்கையின்போது தனியர்கள்/ஆவண எழுத்தர்/புரோக்கர் திரு.M.சுரேஷ், திரு.R.ஆனந்தன், திரு.K.சுப்ரமணி, திரு.S.பாலசுப்ரமணி, திரு.S.வெங்கடேசன், திரு.S.சுரேந்திரகுமார், திரு.N.விஜயகுமார், திரு.T.G.அர்த்தநாரி, திரு.P.கண்ணன்,

திரு.E.K.சரவணன் மற்றும் திரு.P.சுப்ரமணி, இளநிலை உதவியாளர் ஆகியோர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மேலும் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், ·தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை இத்துடன் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்/-xxxx/- (m.g.nghparhkp) துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், நாமக்கல், தர்மபுரி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியரகம், சேலம்-1. ஒப்பம்/-XXXX (அ.ப.பெரியசாமி) 27.11.2020, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், சேலம்-1.

**Submitted:**

I had received a complaint from Tr.A.P.Periyasamy, Deputy Inspection Cell Officer, Salem, Namakkal, Dharmapuri and Krishnagiri Districts, Collectorate, Salem-1 and getting oral concurrence from the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.06/AC/2020 u/s 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 27.11.2020 at 11.30 hrs. sd/-xxxx (A.T.Jaikumar), DSP, V&AC, NKL.

I had sent original FIR along with original complaint of Tr.A.P.Periyasamy, Deputy Inspetcion Cell Officer, Salem, Namakkal, Dharmapuri and Krishnagiri Districts, Collectorate, Salem-1 and the original Proceedings, Statements and Seizure Mahazar.

A. [signature] 27.11.2020

DEPUTY SUPERINTENDENT OF POLICE
VIGILANCE & ANTI-CORRUPTION
NAMAKKAL DISTRICT